காரைக்கால் நகராட்சி
காரைக்கால்
*****

எண்:29-4/கா.ந/D4/வேலை/2022-23 தேதி:18.01.2023

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

காரைக்கால் நகராட்சி சார்பாக முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்கண்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த வணிகர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகிறது. காரைக்கால் மாவட்ட வணிகர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதி வாய்ந்தவர்களாவர்.

| வ. எண் | வேலையின் பெயர் | வரி கேட்பு அறிக்கை எண்ணிக்கை | விண்ணப்ப தொகை + GST 5% | ஏல நிர்ணய தொகை | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | காரைக்கால் நகராட்சிக்கு 2023-24 ம் நிதி ஆண்டிற்கான சொத்து வரி, குப்பை வரி, தொழில் உரிமம் வரி ரசீது அச்சடித்தல்.<br><br>A4 அளவில் பாதியாக 2 ரசீதுகள் இருக்க வேண்டும்.<br><br>முன்புறம் வெறும் பேப்பராகவும், பங்கு பெறும் நிறுவனங்களின் விளம்பரத்தை பின் புறம் அச்சடித்துக் கொள்ளலாம். | 60,000 நகல்கள் | 525/- | ரூ.3,000/-<br><br>(அச்சடிக்கும் பிரதிகளுக்கு உரிய தொகையை நேரடியாக அச்சடிக்கும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.<br><br>அச்சடிக்கும் நிறுவனத்தை ஏலம் எடுப்பவரே தேர்ந்தெடுக்கலாம்.<br><br>அச்சடிக்கும் தொகைக்கு மேல், நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/- க்கு மேல் கோருபவருக்கு ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்) | 7 நாட்கள் |

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும் கடைசி தேதி மற்றும் நேரம் : 25.01.2023 அன்று மாலை 4.00 மணி வரை
2. ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் கடைசி தேதி மற்றும் நேரம் : 25.01.2023 அன்று மாலை 4.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் : 30.01.2023 அன்று மாலை 3.30 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளி திறக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் : 30.01.2023 அன்று மாலை 4.00 மணி வரை

Scanned with OKEN Scanner

காரைக்கால் நகராட்சி
காரைக்கால்

# சொத்து வரி, குப்பை வரி மற்றும் தொழில் உரிமம் வரி ரசீது அச்சடித்தல்.

## நிபந்தனைகள்/ விதிமுறைகள்

1. ஒப்புந்தப்புள்ளி படிவங்கள் ஆணையர், காரைக்கால் நகராட்சி, காரைக்கால் அவர்களால் மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை ஆணையர், காரைக்கால் நகராட்சி அலுவலகத்தில் அட்டவணை 3-ல் குறிப்பிட்டுள்ளபடி தொகையை (GST வரி 5% உட்பட) பணமாக (திரும்ப பெற இயலாது) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

3. சொத்து வரி, குப்பை வரி மற்றும் தொழில் உரிமம் வரி ரசீது A4 அளவில் பாதியாக 2 ரசீதுகள் இருக்க வேண்டும். முன்புறம் வெறும் பேப்பராகவும், ரசீதின் பின்புறம் தேர்வு பெற்ற வணிக நிறுவனங்கள் தங்களது வணிக நிறவனத்தின் விளம்பரத்தை ஆணையர் காரைக்கால் நகராட்சி அவர்களின் அனுமதி பெற்று அச்சடித்து கொள்ளலாம். விளம்பரங்கள் அரசியல் மற்றம் சமயம் சார்ந்து கண்டிப்பாக இருக்க கூடாது.

4. ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் நாள் பொது விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் பிரிக்கப்படும்.

5. காரைக்கால் நகர சபைக்கு எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் நிராகரிக்க உரிமை உண்டு.

6. அதிகபட்சதொகை கோரும் ஏலதாரருக்கு ஏல சட்டவிதிகளுக்கு உட்பட்டு உறுதி செய்யப்படும்.

7. அச்சடிக்கும் நிறுவனத்தை ஏலதாரரே நிர்ணயம் செய்யலாம் மற்றும் அச்சடிக்கும் தொகையை ஏலதாரரே நேரடியாக செலுத்த வேண்டும்.

8. ஏலத்தில் வெற்றிபெற்றவராக அறிவிக்கப்பட்டவர் குறைந்தபட்ச காப்பீட்டு தொகையாக (EMD) ரூ.10,000/- த்தை உடனடியாக நகராட்சி வருவாய் பிரிவில் செலுத்த வேண்டும். அச்சடிக்கும் பணிகள் முழுவதும் முடிவடைந்து, 60,000 அச்சடித்த பிரதிகளையும் அலுவலகத்தில் ஒப்படைத்து காப்பீட்டு தொகையை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். அச்சடிக்கும் தொகைக்கு மேல் கோரும் பணத்தையும் உடனடியாக நகராட்சி வருவாய் பிரிவில் செலுத்த வேண்டும்.

9. காப்பீட்டு தொகையை வரைவோலையாக தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ஆணயர், காரைக்கால் நகராட்சி என்று குறிப்பிட்டு எடுக்க வேண்டும்.

10. பாக்கிதாரர்கள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

Scanned with OKEN Scanner

11. ஏலம் எடுத்தவர் சம்பந்தப்பட்ட வேலையை நகராட்சியின் ஒப்பந்த நிபந்தனைப்படியும், நகராட்சியின் சட்டவிதிகளுக்கு உட்பட்டும் முடிக்க வேண்டும். நிபந்தனைகளை/ சட்டவிதிகளைமீறி நடப்பதாக அறியப்பட்டால், மேற்படி ஒப்பந்த உரிமம் எந்தவித முன் அறிவிப்புமின்றி உடனடியாக ரத்து செய்யப்படும். மேலும் கட்டிய தொகை முழுவதும் நகராட்சியின் கணக்கில் வரவு வைப்பதோடு, கட்டிய தொகை முழுவதையுமோ அல்லது விகிதாச்சாரப்படியோ, எக்காரணத்தைக் கொண்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது என்பதோடு, மேற்படி ஒப்பந்தத்தை அடுத்த நிலையில் உள்ளவருக்கு விடப்படும். இதில் காரைக்கால் நகராட்சி ஆணையர் அவர்களின் முடிவே இறுதியானது.

12. ஒப்பந்தத்தை காரணம் காட்டாமல் ஒத்திவைக்கவோ, நிறுத்திவைக்கவோ, ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

13. ஏலத்தில் வெற்றிபெறும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் உடனே செலுத்த வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான தகவல் பரிமாற்றத்திற்கு ஏலம் பங்கு பெறுபவர்கள் தங்களது இருப்பிட முகவரி, ஆதார் எண், வணிக உரிமம் மற்றும் தொலைபேசி எண்னை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

15. முழுமையாக மற்றும் தெளிவாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களோ, தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆணையர் அவர்களால் நிராகரிக்கப்படும். இதில் யாதொரு உரிமை கோரவோ, நீதிமன்றசட்ட நடவடிக்கைகள் நாடஅனுமதிக்க இயலாது.

16. விண்ணப்பதொகை ரூ.500/- + GST 5% திருப்பி அளிக்கப்படமாட்டாது.

17. வெற்றிபெற்ற ஒப்பந்ததாரர் காப்பீட்டு தொகை மற்றும் ஒப்பந்த கூடுதல் தொகையை **COMMISSIONER, KARAIKAL MUNICIPALITY, AXIS BANK**, காரைக்கால் கிளை Savings Bank A/C No.917020066512049 மற்றும் IFSC CODE: UTIB0001568 என்ற வங்கி கணக்கில் மறுநாள் 31.01.2023 மதியம் 12.00 மணிக்குள் செலுத்தவேண்டும்.

a/c [signature] 18/1/23

(ஆணையர்)
காரைக்கால் நகராட்சி

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால்
2. தலைவர் / செயலாளர் அவர்கள், சேம்பர் ஆஃப் காமர்ஸ், காரைக்கால்
3. தகவல் பலகை, காரைக்கால் நகராட்சி

[signature] 19.1.2023
DESPATCHER
MUNICIPALITY
KARAIKAL-609602

Scanned with OKEN Scanner